1986 நவம்பர் 19]

பட்டி, காலைக் குளாத்திரம்பட்டி, நாகதாசம்பட்டி, வத்மரத் ஹள்ளி ஆகிய எட்டு இடங்களில் இளம் பட்டுப்புழு வளர்ப்பு மையங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) நெருப்பூரில் ஏற்கனவே இளம் பட்டுப்புழு வளர்ப்பு மையம் செயல்பட்டு வருகிறது. எதிர்காலத்தில் பட்டுத் தொழில் ஏரியூரிலும், பெரும்பாளையிலும் அதிகம் வளர்ச்சி அடைந்தால், அங்குள்ள விவசாயிகளுக்கு தேவைக்கேற்ற அளவிற்கு இளம் பட்டுப்புழு வளர்ப்பு மையங்கள் அங்கேயே துவக்கப்படும்.

திரு. க. இரா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தெரிவித்த அந்த கிராமங் களில் எல்லாம் இளம் பட்டுப்புழு வளர்க்கின்ற நிலையங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன என்று சொன்னார்கள். நன்றி. அதோடு தர்மபுரி மாவட்டத்தில் இன்னும் எத்தனை இடங்களில் இதுபோன்ற இளம் பட்டுப்புழு உற்பத்தி செய்கிற நிலையங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன? மேலும் அமைக்க இருக்கிற இடங்களைத் தெரிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், தமிழகத்தினுடைய மொத்த பட்டு உற்பத்தியில் நான்கில் ஒரு பங்கு அங்கே உற்பத்தி ஆகிறது. அதிலே ஏறக்குறைய 17 திட்டங்களின் மூலமாக 67 மையங்களில் இப்படிப்பட்ட விதைப் பண்ணைகள், பட்டுப்புழு வளர்ச்சிப் பண்ணைகள், விதை உற்பத்தி மையங்கள், பட்டு முறுக்காலை போன்ற 67 மையங் கள் ஏற்பாடு செய்யப்பட்டு சிறப்பாக நடந்து வருகின்றன.

ஜெயங்கொண்டத்தில் முந்திரித் தோலிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் ஆலை.

93—(*வினா எண் 9948) டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் முந்திரித் தோலிலிருந்து எண்ணெய் எடுக்கும் ஆலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதியில் முந்திரியைத்தான் அங்குள்ள விவசாயிகள் அதிகமாக பயிரிடுகிறார்கள். அங்கே தனியாருக்குச் சொந்தமான நான்கு தொழிற்சாலைகளில், அந்த முந்திரிகள் பிராசஸ் செய்யப்பட்டு, வெளிநாடுகளுக்கு

அனுப்புவதற்கும் மற்றும் முந்திரியிலிருந்து எண்ணெய் செய்வதற்கும் ஏற்பாடு செய்து, அதை லாபகரமான தொழிலாக அவர்கள் நடத்தி வருகிறார்கள். எனவே அவற்றை எல்லாம் ஆராய்ந்து, நமது அரசும் அதைச் செய்தால் நிச்சயமாக அந்தப் பகுதியிலே அது லாபகரமாக நடக்கும் என்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமது பதிலை மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: தலைவர் அவர்களே, தனியார் யாராவது தொழில் தொடங்க முன்வந்தால் நிச்சயமாக அரசு உதவி செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

(முற்பகல் 10-20)

2. முன்னாள் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களுக்கு பிறந்தநாள் புகழஞ்சலி.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, இந்திய அன்னை பூமியினுடைய மாட்சிமைக்குரிய பிரதமராக 16 ஆண்டு காலம் ஆட்சி புரிந்தவரும், வங்க தேசத்திற்கு விடுதலையினை பெற்றுத் தந்தவரும், வங்கிகளை தேசியமயம் ஆக்கியவரும், 20 அம்சத் திட்டம் என்ற இணையற்ற திட்டத்தைத் தந்தவரும், நடுநிலை நாடுகளுடைய தலைவராகவும், சர்வதேச அரங்கத்தில் தாயகத்தினுடைய புகழை உயர்த்தியவராகவும், ஏழை எளிய மக்களுடைய இதய ஜோதியாகவும். மாதர்குல மாணிக்கமாகவும், குண்டு துளைத்த தொண்டராகவும், நமது நெஞ்சங்களில் என்றும் பசுமையாக விளங்குகின்ற அன்னை இந்திரா காந்தி அவர்களுடைய 70-வது பிறந்த தினமாகிய இன்று நாட்டின் ஒருமைப்பாடு தினமாகக் கொண்டாடுகின்ற இந்த நேரத்தில் நாட்டின் ஒருமைப்பாட்டில் அக்கறை கொண்டு இருக்கிற தமிழக அரசின் சார்பில் வாழ்த்து கூறுவது பொருத்தமாக இருக்கும் என்று நான்கூற விழைகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று இந்தியாவினுடைய பிரதமராக இருந்து, இந்தியாவினுடைய புகழையும், பெருமையையும் அகில உலகத்தில் நிலைநாட்டுவதற்கு முக்கிய காரணமாக இருந்து, இந்தியாவினுடைய செல்வாக்கை உயர்த்திய அன்னை இந்திரா காந்தி அம்மையாருடைய 70-வது பிறந்த